**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17–ஆம் நாள் வியாழக் கிழமை

**அசல் வழக்கு எண்.213/2022**

**CNR. No. TNDG01-002378-2022**

S. சேதுராமன் …. வாதி

/எதிர்/

1. லதா
2. அனுரேஷ்மி
3. யாழினி …. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இன்று 14.11.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு. R. குப்புசாமி மற்றும் திரு. T. முத்தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா தொகையான ரூ.10,52,533/–ஐயும், அசல் தொகை ரூ.8,00,000/–க்கு பிராது தேதி முதல் 12% பின்வட்டியும் மற்றும் செலவு தொகையும் சேர்த்து இறந்துபோன சின்னச்சாமியின் சொத்துக்களிலிருந்து பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்த வேண்டுமென உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

2. **<u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :–</u>**

கடந்த 15.10.2019 அன்று சின்னச்சாமி, அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் வாதியிடம் ரூ.8,00,000/–ஐ கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடனுக்கு 12% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு அன்றே வாதிக்கு ஆதரவாக ரூ.4,00,000/– மதிப்புள்ள இரண்டு பிராமிசரி நோட்டுகளை எழுதிக் கொடுத்தார். மேற்படி கடன் தொகைக்கு மேற்படி சின்னச்சாமி யாதொரு தொகையும் செலுத்தாத நிலையில், 22.12.2020 அன்று 1 முதல் 3 பிரதிவாதிகளை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். இறந்துபோன சின்னச்சாமிக்கு பாத்தியப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அவரது வாரிசுதாரர்கள் என்ற முறையில் பிரதிவாதிகள் அடைந்து அனுபவித்து வருவதால், சின்னச்சாமி இறந்தபிறகு ஓரிரு மாதங்கள் கழித்து, பிரதிவாதிகளை அணுகி வாதி, மேற்படி தாவா கடன் தொகை பற்றிய விவரத்தை தெரிவித்து அதனை திருப்பித் தருமாறு கேட்டபோது பிரதிவாதிகள் ஓரிரு மாதங்களில் செலுத்திவிடுவதாக உறுதியளித்தும் இதுநாள்வரை பிரதிவாதிகள் வாதிக்கு மேற்படி கடன் தொகையை செலுத்தாததால், பிரதிவாதிகளுக்கு வாதி தனது வழக்கறிஞர் மூலம் 12.03.2022–ல் அறிவிப்பு அனுப்பியதை பிரதிவாதிகள் 15.03.2022–ல் பெற்றுக் கொண்டும் பதிலும் அனுப்பவில்லை. பிழை திருத்தல் அறிவிப்பு வாதியின் தரப்பில் அனுப்பப்பட்டது. அதற்கும் பிரதிவாதிகளின் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பப்படவில்லை. அசல் மற்றும் வட்டி தொகையையும் திருப்பி செலுத்தவில்லை. ஆகவே, இந்த வழக்கு.

**3.** வாதியின் தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. **<u>தீர்விற்குரிய பிரச்சனை :</u>**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி இவ்வழக்கில் கோரியுள்ளவாறு தாவா தொகையான ரூ.10,52,533/–ஐயும், அசல் தொகை ரூ.8,00,000/–க்கு பிராது தேதி முதல் 12% பின்வட்டியும் கிடைக்கக் கூடியதா?

இல்லையா? என்பதேயாகும்.

5. வாதியின் குறிப்பான வழக்கு யாதெனில், கடந்த 15.10.2019 அன்று சின்னச்சாமி, அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் வாதியிடம் ரூ.8,00,000/-ஐ கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடனுக்கு ஆதரவாக அன்றே ரூ.4,00,000/- மதிப்புள்ள இரண்டு பிராமிசரி நோட்டுகளான வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 எழுதிக் கொடுத்ததாகவும், மேற்படி கடன் தொகைக்கு மேற்படி சின்னச்சாமி யாதொரு தொகையும் செலுத்தாத நிலையில், 22.12.2020 அன்று 1 முதல் 3 பிரதிவாதிகளை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு இறந்துவிட்டதால், இறந்துபோன சின்னச்சாமிக்கு பாத்தியப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அவரது வாரிசுதாரர்கள் என்ற முறையில் பிரதிவாதிகள் அடைந்து அனுபவித்து வருவதால், பிரதிவாதிகளை அணுகி வாதி, மேற்படி தாவா கடன் தொகை பற்றிய விவரத்தை தெரிவித்து அதனை திருப்பித் தருமாறு கேட்டபோது பிரதிவாதிகள் ஓரிரு மாதங்களில் செலுத்திவிடுவதாக உறுதியளித்தும் இதுநாள்வரை பிரதிவாதிகள் வாதிக்கு மேற்படி கடன் தொகையை செலுத்தாததால், பிரதிவாதிகளுக்கு வாதி தனது வழக்கறிஞர் மூலம் 12.03.2022-ல் வா.சா.ஆ.3 அறிவிப்பு அனுப்பியதை பிரதிவாதிகள் வா.சா.ஆ.4 மூலம் 15.03.2022-ல் பெற்றுக் கொண்டும் பதில் அனுப்பாததால், பிழை திருத்தல் அறிவிப்பு வா.சா.ஆ.5 மூலம் 19.04.2022-ல் அனுப்பியதையும், பிரதிவாதிகள் வா.சா.ஆ.6 அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் மூலம் பெற்றுக் கொண்டும் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதாகும். வா.சா.1-ன் சாட்சியத்திற்கு மாறுபட்ட விதத்தில் சாட்சியம் எதுவும் இல்லை. ஆகவே, 15.10.2019 அன்று சின்னச்சாமி, வாதியிடம் ரூ.8,00,000/-ஐ கடனாக பெற்றுக் கொண்டு அந்த தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதாக ஒப்புக் கொண்டு 15.10.2019 அன்றே வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 புரோநோட்டுகளை எழுதிக் கொடுத்துள்ளார் எனவும், மேற்படி சின்னச்சாமி இறந்துவிட்டதால், சின்னச்சாமியின் சொத்துக்களை அனுபவித்து வரும் பிரதிவாதிகள், வாதிக்கு, சின்னச்சாமியின் சொத்துக்களிலிருந்து தாவா தொகையை பின்வட்டி மற்றும் செலவு தொகையுடன் செலுத்த கடமைப்பட்டவர்கள் என இந்த பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, பிராது தொகை ரூ.10,52,533/—ஐயும், அசல் தொகை ரூ.8,00,000/—க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% பின்வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும்வரை 6% பின்வட்டியும் வழக்கின் செலவு தொகையுடன், சின்னச்சாமியின் சொத்துக்களிலிருந்து பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்த உத்தரவிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைத்திருத்தி இன்று 2022—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17—ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.11.17 14:45:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>**

1. வா.சா.1 – சேதுராமன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| 1. வா.சா.ஆ.1 | – | 15.10.2019—ஆம் தேதியிட்ட ரூ.4,00,000/—க்கு சின்னச்சாமி, வாதிக்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு. அசல். |
| 2. வா.சா.ஆ.2 | – | 15.10.2019—ஆம் தேதியிட்ட ரூ.4,00,000/—க்கு சின்னச்சாமி, வாதிக்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு. அசல். |
| 3. வா.சா.ஆ.3 | – | 12.03.2022—ஆம் தேதி வாதி, பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு. நகல். |
| 4. வா.சா.ஆ.4 | – | அஞ்சல் ஒப்புதல் அட்டைகள். |
| 5. வா.சா.ஆ.5 | – | 19.04.2022—ஆம் தேதி வாதியின் தரப்பில் அனுப்பப்பட்ட பிழை திருத்தல் அறிவிப்பு. நகல். |
| 6. வா.சா.ஆ.6 | – | அஞ்சல் ஒப்புதல் அட்டைகள். |

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.11.17 14:45:41 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

Additional District Court,

Dindigul.

O.S. No. 213/2022

Judgment : FAIR

Dated : 17.11.2022